**Source:** *Tamil Murasu, p2*
**Date:** 22 March 2018

# புதுப்பிக்கப்பட்ட பல்கலைக்கழக கலாசார மையம் இன்று திறப்பு

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் உள்ள பல்கலைக்கழக கலாசார மையம் புதுப்பித்தலுக்குப் பின்னர் இன்று மீண்டும் திறக்கப் படுகிறது.

அம்மையத்தில் கடந்த ஆறு மாத காலமாக புதுப்பிப்புப் பணி கள் நடைபெற்று வந்தன. அதற்கு $20 மில்லியன் செலவானது.

கென்ட் ரிட்ஜ் கிரசென்ட்டில் உள்ள கலைக்கூடத்தில் 120 இருக்கைகள் கொண்ட பலநோக்கு மண்டபமும் சேர்க்கப்பட்டுள்ளது.

புதுப்பொலிவு பெற்றுள்ள மை யத்தில் 1,700 இருக்கைகளைக் கொண்ட பேரரங்கு, நடுத்தர அளவிலான திரையரங்கு, நடன அரங்கு ஆகியன இடம்பெறும். திரையரங்கில் 400க்கு மேற்பட் டோர் அமரலாம்.

புதுப்பித்தலுக்காக கடந்த ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் தேதி பல்கலைக்கழக கலாசார மையத் தில் பல்கலைக்கழக நிகழ்வுகள் தவிர்த்து இதர வரலாற்றுச் சம்பவங்களும் நடத்தப்பட்டன.

கடந்த 2015ஆம் ஆண்டில் முதல் பிரதமர் லீ குவான் இயூ, அதற்கு அடுத்த ஆண்டு முன் னாள் அதிபர் எஸ்ஆர் நாதன் ஆகியோரின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகள் அங்கு இடம்பெற்றன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.